අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# முயற்சியாண்மைக் கல்வி

## வினாத்தாள் I,II



தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

# கல்வி அமைச்சு

| 63 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

முயற்சியாண்மைக் கல்வி - I, II | நேரம் : 3 மணித்தியாலம்

## முயற்சியாண்மைக் கல்வி I

**கவனிக்க.**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

1. வணிக எண்ணமொன்றினை விருத்தி செய்து கொள்வதற்குத் தேவையான வளங்களைப் பெற்று அவற்றை ஈடுபடுத்துவதன் பெறுபேறாக புதிய பொருட்கள், சேவைகள், புதிய செயற்பாடுகள், புதிய வணிகங்கள் என்பவற்றை உருவாக்குபவர்.
   1. முயற்சியாளராவார்
   2. முகாமையாளராவார்
   3. தலைவராவார்
   4. உரிமையாளராவார்

2. அரிசி உற்பத்திக்கான நெல் எந்த உற்பத்திக் காரணியினுள் உள்ளடங்கும்
   1. முயற்சி
   2. மூலதனம்
   3. உழைப்பு
   4. நிலம்

3. பின்வருவனவற்றுள் முயற்சியாளர்களுக்கும் வணிகர்களுக்கும் இடையிலான ஒற்றுமையாக அமைவது.
   1. வணிகச் செயற்பாடுகளில் பாரம்பரிய முறையில் ஈடுபடுதல்
   2. நட்ட இடருக்கு முகங் கொடுத்தல்
   3. போட்டியினை விருப்பத்துடன் தேடிச் செல்லுதல்
   4. குறுகிய கால இலக்கினை உருவாக்கிக் கொள்ளுதல்.

4. புத்துருவாக்கத்துக்கு அடிப்படையாக அமையும் மூலாதாரமாக அமைவது.
   1. புதிய கண்டுபிடிப்பு
   2. நீடிப்பு
   3. எதிர்பாராத நிகழ்வுகள்
   4. பின்பற்றுதல்

5 சுகந்தன் என்பவர் “கல்வியின் மூலம் எதிர்காலத்தில் சிறப்பாக வாழ முடியாது” எனக் கூறுகின்றார் இவர் கொண்டிருக்காத முயற்சியாண்மைப் பண்பு.
   1. ஆக்கத்திறன்
   2. புத்துருவாக்கம்
   3. நெகிழும்தன்மை
   4. நேர் மனப்பாங்கு

6. பின்வருவனவற்றுள் முயற்சியாண்மை மூலம் முயற்சியாளருக்குக் கிடைக்கும் நன்மையாக அமைவது.
   1. பிரதேச அபிவிருத்திகள் ஏற்படுகின்றமை
   2. தொழில்வாய்ப்புக்கள் உருவாகின்றமை
   3. கவர்ச்சிகரமான இலாபத்தை உழைக்க முடிதல்
   4. நாட்டின் மொத்த உற்பத்தி அதிகரித்தல்

7. விவசாய நாடான இலங்கையில் அரிசி இறக்குமதி செய்யவேண்டிய தேவையுள்ளமைக்கான பிரதான காரணியாக அமைவது.
   1. நிலப் பற்றாக்குறை
   2. முயற்சியாளர் பற்றாக்குறை
   3. நீர் பற்றாக்குறை
   4. விவசாய உபகரணப் பற்றாக்குறை

8. சிற்றளவு வணிகத்தின் பலமாக அமையக்கூடியது
   1. குறைந்தளவு வளங்களைக் கொண்டு ஆரம்பிக்க முடிதல்
   2. நவீன தொழிநுட்பத்தையே பயன்படுத்த வேண்டியிருத்தல்
   3. அரசின் ஊக்குவிப்புக்கள் குறைவாக இருத்தல்
   4. ஊழியர்களை இணைத்தலும் பயிற்சியளித்தலும் கடினமாக இருத்தல்

9. முயற்சியாளர் ஒருவர் தனது வணிகத்திலுள்ள பழுதடைந்த உபகரணங்களைத் திருத்தியமைத்தார். இது முயற்சியாளரின் எத்திறனினுள் அடங்கும்.
   1. தொழிநுட்பத் திறன்
   2. மானிடத் திறன்
   3. தொடர்பாடல் திறன்
   4. எண்ணக்கரு ரீதியான திறன்

10. முயற்சியாளர் ஒருவர் தலைவரின் வகிபங்கினை நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கையாக அமையக்கூடியது.
    1. வணிகத்துக்குத் தேவையான மூலதனத்தை ஈடுபடுத்தல்.
    2. வணிகத்தின் இலாப நட்டத்தினைப் பொறுப்பேற்றல்.
    3. வணிகத் திட்டத்தைத் தயாரித்தல்.
    4. ஊழியர்களை ஊக்கப்படுத்தல்.

11. வணிகமொன்றின் வாய்ப்பு மற்றும் சவால்களை முழுமையாகக் கண்டறிய ஆய்வு செய்ய வேண்டிய சூழலாக பின்வருவனவற்றில் எதனை இனங்காண முடியும்.
    1. அகச் சூழல்.
    2. புறச் சூழல்.
    3. அண்மிய சூழல்.
    4. பொருளாதாரச் சூழல்.

12. பின்வருவனவற்றுள் அகச்சூழல் காரணியாக அமைவது.
    1. போட்டியாளர்.
    2. வாடிக்கையாளர்.
    3. ஊழியர்.
    4. வழங்குனர்.

13. வணிகத்தின் பூகோளச் சூழலுக்கு பொருத்தமான உதாணமாக அமைவது.
    1. வரட்சி காரணமாக விவசாயச் செய்கைகள் அழிவடைதல்.
    2. தாவர உணவை உண்ணும் வாடிக்கையாளர் எண்ணிக்கை அதிகரித்தல்
    3. விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்ய அரசு ஊக்குவித்தல்.
    4. இலங்கையின் விவசாய உற்பத்திகளை சர்வதேச சந்தைகளுக்கு அனுப்புதல்.

14. இலங்கையில் தாராளமாகக் காணப்படும் பௌதீக வளங்களைப் பயன்படுத்துவதனால் தோன்றக்கூடிய வணிக வாய்ப்புக்களை மட்டும் கொண்டுள்ள தொகுதி.
    1. விவசாய நடவடிக்கை, சுற்றுலாக் கைத்தொழில், ஆயுர்வேத மருத்துவத்துறை
    2. நிர்மாணக் கைத்தொழில், சுற்றுலாக் கைத்தொழில், ஆயர்வேத மருத்துவத்துறை
    3. விவசாய நடவடிக்கை, இலத்திறனியல் கைத்தொழில், ஆயர்வேத மருத்துவத்துறை
    4. விவசாய நடவடிக்கை, இலத்திரனியல் கைத்தொழில், நிர்மாணக் கைத்தொழில்

15. மனித தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்கின்ற அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும்

1. முயற்சியாண்மையாகும்
2. உற்பத்தியாகும்
3. வணிகமாகும்
4. சந்தையாகும்

16. இலங்கை புகையிரதத் திணைக்களமானது காங்கேசன் துறையிலிருந்து கொழும்புக் கோட்டை வரை செல்லும் புகையிரதத்தில் அதி சொகுசுப் (Luxury) பெட்டி ஒன்றை இணைத்துக்கொண்டது. இதன் இலக்கு நுகர்வோராகக் கருதப்படக்கூடியவர்.

1. வயது முதிர்ந்தோர்
2. அதிக வருமானம் பெறுவோர்
3. இளைஞர், யுவதிகள்
4. நோயாளிகள்

17. எல்டர்ஸ் ரீவி (Elders TV) என்னும் பெயரில் ஓய்வு பெற்ற அரச மற்றும் தனியார் ஊழியர்களுக்காக புதிய தொலைக்காட்சி அலைவரிசை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இது புதிய வணிகமொன்றில் பிரவேசிப்பதற்குப் பொருத்தமான எவ் உபாய மார்க்கத்தினுள் உள்ளடங்கும்.

1. விசேட புதிய பொருள், சேவைகளை முன்வைத்தல்
2. உற்பத்தி வேறுபாடுகளை உபயோகித்து பொருள், சேவைகளை முன்வைத்தல்
3. சந்தை இடைவெளியை இனங்கண்டு பொருள், சேவைகளை முன்வைத்தல்
4. புத்துருவாக்கத்தின் மூலம் பொருள், சேவைகளை முன்வைத்தல்

18. சூழலிலுள்ள பிரச்சனைகளுக்குத் தீர்வுகளாக மனிதத் தேவை மற்றும் விருப்பங்களை நிறைவுசெய்கின்ற வணிகப் பெறுமானமுடைய சிந்தனைகள்

1. வணிக எண்ணம் ஆகும்.
2. வணிக வாய்ப்பு ஆகும்.
3. வணிகம் ஆகும்.
4. உற்பத்தி ஆகும்.

19. வணிக எண்ணங்களில் மிகச் சிறந்த வணிக எண்ணங்கள் மூன்றை மட்டும் தெரிவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் பகுப்பாய்வு நுட்பமாக அமைவது.

1. முழுப்பகுப்பாய்வு
2. சூட்சுமமான பகுப்பாய்வு
3. சுவட் (SWOT) பகுப்பாய்வு
4. சூழல் பகுப்பாய்வு

20. வங்கிகள் தமது வாடிக்கையாளரின் தேவை கருதி அரச விடுமுறை தினங்களில் வங்கிச் சேவைகளை வழங்க முன் வந்தமையானது பின்வரும் வணிக எண்ணங்களின் மூலங்களில் எதனுள் அடங்கும்.

1. பொழுதுபோக்கு மற்றும் விருப்பம் வணிக எண்ணமாக மாற்றமடைதல்.
2. ஆக்கபூர்வமான சிந்தனை ஊடாக வணிக எண்ணம் தோன்றுதல்.
3. வழங்குனர் மூலம் வணிக எண்ணம் தோன்றுதல்.
4. சந்தை ஆராய்ச்சியினூடாக வணிக எண்ணம் தோன்றுதல்.

21. வணிகம் ஒன்று ஆரம்பிக்கப்படும் போதும் செயற்படுத்திக் கொண்டு செல்லும் போதும் குறித்த வணிகத்தின் மூலம் செயற்படுத்த எதிர்பார்க்கும் நடவடிக்கைகளை முறையாக ஒழுங்குபடுத்துகின்ற அட்டவணை

1. வணிகத் திட்டமாகும்
2. சந்தைப்படுத்தல் திட்டமாகும்
3. உற்பத்தித் திட்டமாகும்
4. நிர்வாகத் திட்டமாகும்

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 22, 23 மற்றும் 24 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

குழந்தைகளுக்கான பால்மாவிற்கு குறித்த பிரதேசத்தில் 20000 பைக்கற்றுக்களுக்குக் கேள்வி உள்ளதாகவும் தற்போது சந்தையிலுள்ள வழங்குனர்களால் 15000 பைக்கற்றுக்களே வழங்கப்படுவதாகவும் சந்தை ஆய்வினூடாகக் கண்டறியப்பட்டது.

22. குறித்த பால்மாவிற்கான சந்தை இடைவெளி எவ்வளவு?

1. 20000 2. 15000
3. 10000 4. 5000

23. சந்தை இடைவெளியில் 60மூ இனை மட்டுமே குறித்த நிறுவனத்தால் வழங்க முடியுமெனில் வழங்கக்கூடிய பால்மா பைக்கற்றுக்களின் எண்ணிக்கை.

1. 3000 2. 6000
3. 9000 4. 12000

24. பால்மா பைக்கற் ஒன்றின் விலை ரூபா 500 எனின் குறித்த நிறுவனத்தின் எதிர்பார்க்கப்படும் வருமானம் எவ்வளவு.

1. ரூபா 1,000,000 2. ரூபா 1,500,000
3. ரூபா 2,000,000 4. ரூபா 2,500,000

25. உற்பத்தித் திட்டத்தைத் தயாரிப்பதன் அடிப்படை நோக்கமாக அமைவது.

1. உற்பத்தி செயன்முறையைக் கண்டறிவது 2. மூலப்பொருட் கிரயத்தினைக் கண்டறிவது
3. உற்பத்திக் கிரயத்தினைக் கண்டறிவது 4. ஊழியக் கிரயத்தினைக் கண்டறிவது

26. உற்பத்திச் செயன்முறையினை ஒழுங்கு முறையாகக் காட்டுவது.

1. உள்ளீடு – வெயியீடு – மாற்றல் செயற்பாடு 2. உள்ளீடு – மாற்றல் செயற்பாடு – வெயியீடு
3. மாற்றல் செயற்பாடு – உள்ளீடு – வெயியீடு 4. வெயியீடு – மாற்றல் செயற்பாடு – உள்ளீடு

27. வணிகமொன்றின் பிரதான வளமான மனிதவளம் தொடர்பிலான விடயங்களை உள்ளடக்கியதான திட்டம்.

1. வணிகத் திட்டம் 2. சந்தைப்படுத்தல் திட்டம்
3. உற்பத்தித் திட்டம் 4. நிர்வாகத் திட்டம்

28. முகாமைத்துவப் பணிப்பாளருக்கு வழங்கப்படவேண்டிய கொடுப்பனவானது நிர்வாகத் திட்டத்தின் எப்பிரிவினுள் உள்ளடக்கப்படும்.

1. நிர்வாகரீதியான பதவிகளும் கருமங்களும் 2. ஊழியர் சம்பளமும் கூலியும்
3. ஏனைய நிர்வாகச் செலவுகள் 4. நிர்வாக நிலையான சொத்துக்கள்

29. வணிக அமைப்புக்களை தனியார் துறை வணிகம், பொதுத்துறை வணிகமென வகைப்படுத்துவதற்கான அடிப்படையாக அமைவது.

1. நோக்கம் 2. பருமன்
3. உரிமை 4. உற்பத்தியின் தன்மை

30. தனியார்துறை வணிக அமைப்புக்களை மட்டும் கொண்ட தொகுதி

1. தனியுடமை, பங்குடமை, கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
2. தனியுடமை, பங்குடமை, திணைக்களம்
3. தனியுடமை, பங்குடமை, கூட்டுத்தாபனம்
4. தனியுடமை, பங்குடமை, அரச கம்பனி

31. தனியொருவருக்கு உரிமையுள்ளதாகவும் அவராலேயே ஆரம்பித்து வணிக நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதுமான வணிகம்.
1. கூட்டிணைக்கப்பட்ட தனியார் கம்பனி
2. பங்குடமை
3. தனியாள் உடமை
4. கூட்டுத்தாபனம்

32. தனியாள் உடமை வணிகத்தின் பண்பாக **அமையாதது.**
1. உரிமையாளரால் மூலதனம் இடப்படுதல்.
2. உரிமை தனியொருவருக்கு உரித்தானதாக இருத்தல்.
3. இலாப நட்டங்களை தனியொருவர் அனுபவித்தல்.
4. நிலைத்தியங்கும் தன்மை காணப்படுதல்.

33. நண்பர்களான சஜித், மஜித் ஆகிய இருவரும் கணக்காய்வாளர்களாகப் பணியாற்றுகின்றார்கள். தாம் இணைந்து ஒரு வணிகத்தை ஆரம்பித்து கணக்காய்வுத் தொழிலை மேற்கொள்ள விரும்புகின்றனர். இவர்கள் ஆரம்பிக்கக்கூடிய மிகப் பொருத்தமான வணிக அமைப்பு.
1. தனியாள் உடமை
2. பங்குடமை
3. கூட்டிணைக்கப்பட்ட தனியார் கம்பனி
4. கூட்டிணைக்கப்பட்ட பொதுக் கம்பனி

34. தனியார் துறையிலுள்ள சட்ட ஆளுமையுடைய வணிக அமைப்பாகக் காணப்படுவது.
1. தனியாள் உடமை
2. பங்குடமை
3. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
4. கூட்டுத்தாபனம்

35. கூட்டிணைக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் பிரதிகூலமாக அமைவது.
1. சட்டக் கட்டுப்பாடுகள் அதிகமாக இருத்தல்.
2. சட்ட ஆளுமை இருத்தல்.
3. பொறுப்பு வரையறுக்கப்பட்டிருத்தல்.
4. தொடர்ந்தியங்கும் தன்மை காணப்படுதல்.

36. தற்காலத்தில் பெண்கள் முயற்சியாண்மையில் ஈடுபடுவது அத்தியாவசியமான விடயமாகும். இதற்குப் பிர தான காரணமாக அமைவது.
1. சவால்களை எதிர்கொள்வதில் ஆர்வமின்மை.
2. தங்கிவாழும் மனோநிலையில் இருத்தல்.
3. சிக்கனத் தன்மை கொண்டிருத்தல்.
4. சனத்தொகையில் அதிகமானவர்களாக இருத்தல்

37. முயற்சியாண்மைக் கலாசாரம் ஒன்றை உருவாக்குவதற்காக அரசினால் வழங்கப்படும் ஊக்குவிப்பாக அமைவது.
1. வரி விதித்தல்.
2. வரிச் சலுகைகளை வழங்கல்.
3. அரச வணிக முயற்சிகயை ஆரம்பித்தல்.
4. வணிகக் கடன்களை நிறுத்தல்.

38. வணிகமொன்றின் செயற்பாடுகளில் வாடிக்கையாளர் அக்கறை செலுத்துவதற்கு மிகப் பிரதான காரணமாக அமைவது.
1. வரிப் பணத்தினை சரியான முறையில் பெற்றுக்கொள்ளல்.
2. நியாயமான விலையில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளல்.
3. நியாயமான சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளுதல்.
4. வழங்கிய கடனை குறித்த காலத்தில் மீளப் பெற்றுக்கொள்ளுதல்.

39. வணிக உரிமையாளர்களின் பிரதிபலன்களை அதிகரிப்பதற்குப் பங்களிப்பது எந்த சமூகப் பொறுப்பினுள் உள்ளடங்கும்.
1. பொருளாதாரப் பொறுப்பு.
2. சட்டப் பொறுப்பு.
3. பண்பாட்டுப் பொறுப்பு.
4. பொது நல விருப்புடைய பொறுப்பு.

40. இலங்கையில் முயற்சியாளர்களுக்குக் கிடைக்கும் நிதிசார் ஊக்குவிப்பாக அமைவது.
1. முயற்சியாளருக்கான இலவசப் பயிற்சி வழங்கல்.
2. சந்தை வாய்ப்புக்களைத் தேடிக்கொடுத்தல்.
3. கடன் மீளச்செலுத்தும் கால எல்லையை அதிகரித்தல்.
4. தொழிநுட்பப் பயிற்சிகளை வழங்குதல்.

(40 புள்ளிகள்)

**கல்வி அமைச்சு**

| 63 | T | I, II |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

| முயற்சியாண்மைக் கல்வி - I, II | நேரம் : 3 மணித்தியாலம் |
|---|---|

**முயற்சியாண்மைக் கல்வி - II**

* **முதலாம்** வினாவையும் வேறு எவையேனும் **நான்கு** வினாக்களினையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களிற்கும் மாத்திரம் விடை எழுதுக.

* **முதலாம்** வினாவிற்கு 20 புள்ளிகளும் ஏனைய எல்லா வினாக்களிற்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** பின்வரும் சம்பவக் கற்கையை கவனமாக வாசித்து 1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

எதனையும் சாத்தியமாகச் சிந்திக்கும் விக்ரமன் தனது வாழ்க்கையானது சுய திறனில் தங்கியுள்ளது என்ற நம்பிக்கையை கொண்டிருந்தார். இயல்பாகவே சுறுசுறுப்புக் கொண்ட இவர் சிறு வயதிலிருந்தே வீட்டில் பழுதடையும் இலத்திரணியல் உபகரணங்களை தானே திருத்தும் முயற்சியில் ஈடுபட்டு பலமுறை இதில் வெற்றியும் கண்டார். இவ் ஆர்வத்தின் காரணமாக சுநகசநளா ஆழடிடைந என்னும் பெயரில் தொலைபேசி திருத்தும் நிலையம் ஒன்றை ஆரம்பித்தார். இதற்கு மேலும் பலம் சேர்க்க பகுதிநேர மாக இலங்கை தொழிநுட்பக் கல்லூரியில் இலத்திறனியல் மற்றும் தொலைத்தொடர்பு உபகரணங்கள் பராமரிப்பு தொடர்பில் ஏஎு சான்றிதழ் கற்கைநெறியை பகுதிநேரமாகத் தொடர்கின்றார். தற்போதைய பொருளாதார நெருக்கடியினாலும் அரசின் கைத்தொலைபேசிகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டினாலும் தொலைபேசிக்கான விலையேற்றம் மற்றும் இவற்றிற்கான தட்டுப்பாடு நிலவியது இவருக்கு பெரிய வாய்ப்பாக இருந்தது. இற்நிலமையை ஆய்வு செய்த விக்ரமன் தனது வணிகத்தினை அடுத்த கட்டத்திற்கு முன்னேற்றும் விதமாக பழுதடைந்த தொலைபேசிகளை குறைந்த விலைக்கு வாங்கி அதன் பாகங்களைக் கொண்டு புதிய தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி புதிய திறன்களைக் கொண்ட தொலைபேசிகளை உருவாக்கி விற்பனை செய்தார். இதற்காக தனக்கு உதவியாளர் ஒருவரையும் இணைத்துக்கொன்டு முன்னேறிச் சென்றார்.

1. விக்ரமனிடம் காணப்பட்ட முயற்சியாண்மைப் பண்புகள் இரண்டு தருக.
2. இவ் வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படும் மனிதத் தேவை யாது?
3. மேற்படி வணிகத்தினால் தேசிய பொருளாதாரத்திற்குக் கிடைத்த நன்மைகள் இரண்டு தருக.
4. **Refresh Mobile** வணிகத்திற்குக் கிடைத்த வாய்ப்புக்கள் இரண்டு தருக.
5. **Refresh Mobile** இன் புதிய தொலைபேசி உருவாக்கமானது SCAMPER மாதிரியில் எப்பிரிவினுள் உள்ளடங்கும்.

**Refresh Mobile** வணிகம் தொடர்பில் முதல் மாதத்திற்காக மதிப்பிடப்பட்ட காசு உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சல் தொடர்பான தகவல்கள் வருமாறு.

| விபரம் | தொகை (ரூபா) |
|---|---|
| விக்ரமன் கொண்டுவந்த காசு | 800,000 |
| வணிகத்திட்டம் தயாரித்தல் செலவு | 10,000 |
| இடத்தினைத் தயார்படுத்துவதற்கான செலவு | 7,000 |
| பதிவுக் கட்டணம் | 4,000 |
| வங்கிக்கடன் பெற்றது | 500,000 |
| தொலைபேசி திருத்த உபகரணக் கொள்வனவு | 200,000 |
| கண்ணாடி இறாக்கைகள் கொள்வனவு | 150,000 |
| கணிணித் தொகுதி கொள்வனவு | 100,000 |
| தொலைபேசி விற்பனை வருமானம் பெற்றது | 350,000 |
| தொலைபேசி திருத்தக் கட்டணங்கள் பெற்றது | 250,000 |
| பழைய தொலைபேசிகள் கொள்வனவு | 70,000 |
| தொலைபேசி உதிரிப்பாகங்கள் கொள்வனவு | 220,000 |
| உதவியாளர் சம்பளம் | 25,000 |

6. நிலையான சொத்துக்களின் பெறுமதியினைக் கணிப்பிட்டுக் காட்டுக.
7. வணிகத்தை ஆரம்பிக்க முன்னரான செலவுகளைக் கணிப்பிட்டுக் காட்டுக.
8. முதல் மாதத்திற்கான மொத்தக் காசு உட்பாய்ச்சல் எவ்வளவு?
9. முதல் மாதத்திற்கான மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல் எவ்வளவு?
10. முதல் மாத இறுதியில் காசு மீதியினைக் கணிப்பிடுக.

(2X10=20 புள்ளிகள்)

2.

1. உற்பத்திக் காரணிகளான உழைப்பு, மூலதனம் என்பவற்றை உதாரணம் மூலம் விளக்குக.
2. “வளங்களை மனிதத் தேவைகள் விருப்பங்களை நிறைவு செய்கின்ற பொருள்கள், சேவைகளாக மாற்றுவதற்கு முயற்சியாளர்கள் மிக அவசியமானவர்கள்” இக்கூற்றினை நீர் ஏற்றுக்கொள்கின்றீரா? உமது விடைக்கான காரணத்தை தருக.
3. தனிநபர்கள் தமது ஆக்கத்திறனை விருத்திசெய்து கொள்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் நான்கு தருக.
4. வணிகங்களை அவற்றின் பருமன் அடிப்படையில் வகைப்படுத்துக.
5. “நடைமுறையில் ஆரம்பிக்கப்படும் பெருமளவிலான சிற்றளவு வணிகங்கள் தோல்வியடைவதைக் காணமுடிகின்றது.” இவ்வாறு தோல்வியடைவதற்கான நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

(2X5=10 புள்ளிகள்)

3.

1. முயற்சியாளர் ஒருவர் சிற்றளவு வணிகத்தில் ஈடுபடும்போது வகிக்கவேண்டிய வகிபாகங்கள் எவை?
2. முயற்சியாளரின் முன்மாதிரியாகச் செயற்படும் திறன்கள் என்பதனை சுருக்கமாக விளக்கி உதாரணம் தருக.
3. புராதன வணிகச் சூழலுக்கும் நவீன வணிகச் சூழலுக்கும் இடையிலான பிரதான வேறுபாடுகள் இரண்டு தருக.
4. வணிகமொன்றின் புறச்சூழலில் உள்ளடங்கும் காரணிகள் நான்கு தருக.
5. நடைமுறையில் வணிகத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற பொருளாதாரச் சூழல் காரணிகளுக்கு இரு உதாரணங்கள் தருக.

(2X5=10 புள்ளிகள்)

4.

1. இலங்கையின் பொருளாதாரத்தில் உள்ளடங்குகின்ற பிரதான மூன்று வணிகத் துறைகளும் எவை?
2. வணிகமொன்றை புதிதாக ஆரம்பிக்கும் போது பிரதானமாக மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள் நான்கு தருக.
3. புதிய முயற்சியாளர் ஒருவர் சந்தையில் பிரவேசிப்பதற்காகப் **புதிய பொருட்கள் அல்லது சேவை-களைப் புதிய சந்தையில் முன்வைப்பதற்குப்** பொருத்தமான உதாரணங்கள் இரண்டு தருக.
4. சிறந்த வணிக வாய்ப்பொன்றின் பண்புகள் நான்கு தருக.
5. வணிகத் திட்டத்திலுள்ள நிறைவேற்றுச் சுருக்கத்தின் உள்ளடக்கங்கள் நான்கு தருக.

(2X5=10 புள்ளிகள்)

5.

1. கீரன் என்பவர் கோழி இறைச்சிக்கான வணிகம் ஒன்றை ஆரம்பிக்க எண்ணி சந்தை ஆய்வில் ஈடுபட விரும்புகின்றார். இவர் சந்தை ஆய்வின்போது கருத்தில் கொள்ளவேண்டிய பிரதான மூன்று விடயங்கள் எவை?
2. நிதித்திட்டம் ஒன்றின் மூலம் முயற்சியாளருக்குக் கிடைக்கும் நன்மைகள் நான்கு தருக.
3. நோக்கத்தின் அடிப்படையில் வணிகத்தினை வகைப்படுத்தி அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.
4. தனியுடமை வணிகமொன்றின் பெயரைப் பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் எவை?
5. “கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளில் பங்குதாரர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகும்.” இங்கு பொறுப்பு வரையறுக்கப்பட்டது என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(2X5=10 புள்ளிகள்)

**6.**

1. அங்கீகார வணிகத்தின் அடிப்படைப் பண்புகள் இரண்டு தருக.
2. இலங்கையில் பெண் முயற்சியாண்மைக்குச் சாதகமாக அமையும் வாய்ப்புக்கள் நான்கு தருக.
3. வணிகத்தின் பண்பாட்டுப் பொறுப்பிற்கு இரண்டு உதாரணங்கள் தருக.
4. சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதால் வணிகத்திற்குக் கிடைக்கும் நன்மைகள் நான்கு தருக.
5. முயற்சியாண்மைக்கு நிதிசார் ஊக்குவிப்புக்களை வழங்கும் இரு நிறுவனங்களின் பெயர்களை எழுதுக.

(2X5=10 புள்ளிகள்)

**7.**

ரஞ்சன் வணிகத்தின் மதிப்பிடப்பட்ட மாதாந்த தகவல்கள் வருமாறு

| விபரம் | தொகை (ரூபா) |
|---|---|
| மூலப்பொருள் கிரயம் | 120,000 |
| ஊழியக் கிரயம் | 50,000 |
| உற்பத்திக்கான ஏனைய கிரயம் | 30,000 |
| விற்பனை வருமானம். | 400,000 |
| விற்பனை நிலைய பராமரிப்புச் செலவுகள் | 30,000 |
| நிர்வாக மின்கட்டணம் | 7,000 |
| அலுவலக உபகரணப் பெறுமானத் தேய்வு | 4,000 |
| எழுதுகருவிச் செலவுகள் | 2,000 |
| அஞ்சல் செலவுகள் | 1,000 |
| விளம்பரக் கட்டணம் | 10,000 |
| விற்பனை ஊழியர் சம்பளம் | 20,000 |
| வங்கிக்கடன் வட்டி | 8,000 |

குறித்த மாதத்தில் 1000 அலகுகள் உற்பத்தி செய்யப்படும்.

1. மொத்த உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிடுக (2 புள்ளிகள்)
2. ஒரு அலகிற்கான உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிடுக (2 புள்ளிகள்)
3. வணிகத்தின் உத்தேச பெறுபேற்றினைக் கணிப்பிடுவதற்கான அட்டவணையைத் தயாரிக்குக.

(6 புள்ளிகள்)